


22. 08. 2025

தலைப்பு செய்திகள்

- நாடுமுழுவதும் கடந்த 11 ஆண்டுகளில் 4 கோடிக்கும் மேற்பட்ட ஏழை எளிய குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் திரு.நரேந்திமோடி தெரிவித்தார்.

- திருநெல்வேலியில் பி.ஜே.பியின் மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில், கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷா இன்றுமாலை உரையாற்றுகிறார்.

- வளர்ச்சியடைந்த பாரதத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் மிகப்பெரிய பங்களிப்பு வழங்கும் என்று இஸ்ரோ தலைவர் திரு.வி.நாராயணன் கூறினார்.
- தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு கட்டடங்களை
- முதலமைச்சர்
  திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

- தாய்லாந்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சித்தார்த் ராவத் முன்னேறினார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

நாடுமுழுவதும் கடந்த 11 ஆண்டுகளில் நான்கு கோடிக்கும் மேற்பட்ட ஏழை எளிய குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திமோடி தெரிவித்துள்ளார்.

பீஹார் மாநிலம் கயாவில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களை இன்று தொடங்கிவைத்து பேசிய பிரதமர், இளைஞர்கள், விவசாயிகள், பெண்கள் வளர்ச்சியை இலக்காக கொண்டு மத்தி அரசு செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

ஆப்ரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலை தொடர்ந்து இந்தியாவின் பாதுகாப்பு கொள்கையில் புதிய சகாப்தம் தொடங்கியுள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

தீவிரவாத குற்றவாளிகளுக்கு அவர்கள் கற்பனை செய்யாத அளவிற்கு தண்டனை வழங்கப்படும் என்று எச்சரித்தார்.

மத்தியிலும் மாநிலத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சியால் பீஹார் வேகமாக வளர்ச்சிப்பெற்று வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

அமித்ஷா

திருநெல்வேலியில் மண்டல அளவிலான வாக்குச்சாவடி முகவர்கள் மாநாடு பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷா தலைமையில் இன்று நடைபெறுகிறது.

தச்சநல்லூரில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில் பங்கேற்க இன்றுமாலை நெல்லை வரும் திரு. அமித்ஷா வாக்குச்சாவடி முகவர்கள் மத்தியில் உரையாற்றுகிறார்.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

ஐ.நா-வின் அமைதி நிலை நாட்டும் இயக்கங்களில் இந்தியா மிகப்பெரிய பங்காற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மகளிர் ராணுவ அதிகாரிகளிடையே இன்று உரையாற்றிய அவர், இந்த அமைதி நிலைநாட்டும் இயக்கங்களில் பெண்கள் ஈடுபட இந்தியா ஆதரவளிப்பதாக எடுத்துரைத்தார்.

பாலின சமத்துவ இடைவெளியை களைவதற்கான வலுவான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், முப்படைகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரிப்பதோடு, கடினமான சூழல்களில் அமைதியை நிலைநாட்ட பெண் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மகளிரை முன்னிலைப்படுத்தவும், பணிகளில் சமவாய்ப்பு அளிப்பதையும் மத்திய அரசு தொடர்ந்து உறுதி செய்வதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வேற்றுமையிலும், சமத்துவத்திலும் நீடித்த அமைதியை ஏற்படுத்தி உள்ளடக்கிய தலைமைத்துவத்தை முன்னெடுத்துச் சென்று சமத்துவமிக்க சமூகத்தை உருவாக்க ஐ.நா. உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து இந்தியா செயலாற்றும் என்றும் திரு.ராஜ்நாத் சிங் உறுதியளித்தார்.

❖❖❖❖❖❖

சர்பானந்த சோனோவால்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 5 முக்கிய மசோதாக்களால் காலணி ஆதிக்கத்தின் கடல்சார் கொள்கைகளை புறந்தள்ளி நீலப்புரட்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

இதன்படி கடலில் சரக்கு போக்குவரத்து, கடலோர கப்பல் கட்டுமானம், கடல் வணிகம், இந்திய துறைமுகம், சரக்கு ஆவண பட்டியல் போன்றவற்றை முன்னிறுத்தும் இந்த 5 மசோதாக்கள் மூலம் கடல் மாசு குறைவதோடு, தளவாட போக்குவரத்து செலவும் வெகுவாக குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய துறைமுக சட்டத்திருத்த மசோதா 2025 நிறைவேற்றப் பட்டுள்ளதால், சிறிய துறைமுகங்கள் மேலாண்மைக்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, கடல் நிலையிலான பிரச்சனைகளுக்கு மாநிலங்கள் அளவிலேயே தீர்வுகாணவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

ஷாங்காய்

சீனாவின் டியான்ஜின் நகரில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திமோடி பங்கேற்பது, இந்தியா – சீனா இடையிலான இருதரப்பு உறவிற்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று இந்தியாவிற்கான ரஷ்ய தூதர் ஸ்ஸு ஃபெய்ஹாங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதனை தெரிவித்துள்ள அவர் அண்மையில் சீனாவில் நடைபெற்ற 24-வது சிறப்பு பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட 10 அம்சங்களின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

ஷாய்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாடு 2025 குறித்த அமர்வில் உரையாற்றிய அவர், இந்தியாவும், சீனாவும் நட்புறவு நாடுகள் என்றும், இருநாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு எட்டப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

டெல்லியில் தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி செலுத்தப்பட்டு அதன் வசிப்பிடங்களிலேயே மீண்டும் விடப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.

தெரு நாய்களை காப்பகங்களில் அடைக்கப்பட வேண்டும் என்ற முந்தைய தீர்ப்பை மாற்றியமைத்து நீதிபதிகள் விக்ரம்நாத் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதேவேளையில் ராபிஸ் வைரஸால் பாதிக்கப்பட்ட ஆக்ரோஷமாக திரியும் நாய்கள் காப்பகங்களில் வைக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுஇடங்களில் நாய்களுக்கு உணவு வழங்க கட்டுபாடுகள் விதித்துள்ள நீதிமன்றம், நாய்களுக்கு உணவு வழங்க தனிஇடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கான ஒருமித்த கொள்கையை உருவாக்க மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களையும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டை, நெல்லை மாவட்டம் நாங்குநேரி ஆகிய 2 இடங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் உள்ளிட்ட 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு கட்டடங்களை சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் திறந்து வைத்தார்.

முன்னதாக சுகாதாரத் துறையின் கீழ் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து இந்துசமய அறநிலையத்துறையின் கீழ் 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 திருக்கோவில்களில் 17 புதிய திட்டப்பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

மேலும் 32 அரை கோடி ரூபாய் செலவில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான 9 திருக்கோவில்களை அதன் பழமை மாறாமல் புனரமைக்கும் திருப்பணிகளையும் அவர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖

இஸ்ரோ

வளர்ச்சியடைந்த பாரதத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் மிகப்பெரிய பங்களிப்பு வழங்கும் என்று இஸ்ரோ தலைவர் திரு.வி.நாராயணன் கூறினார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய கூட்டத்தில் துவக்க உரையாற்றியஅவர், வான்சுற்று பாதைகளில் செயற்கை கோள்களை இணைப்பது, பிரிப்பது போன்ற தொழில்நுட்ப திட்டங்களை மேற்கொள்ளும் 4 நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று கூறியுள்ளார்.

நிலவு சுற்றுப்பாதையில் உள்ள சிறந்த புகைப்பட கருவி நம்நாட்டை சேர்ந்தது என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா வெற்றிகரமாக மேற்கொண்ட சர்வதேச விண்வெளி பயணத்தில் இஸ்ரோவின் வெற்றி குறித்தும் திரு.நாராயணன் எடுத்துரைத்தார்.

இதனிடையே திரு. நாராயணன், சுபான்ஷு ஷுக்லா உடன் இணைந்து குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவை இன்று புதுதில்லியில் சந்தித்தார்.

குடியரசு தலைவரிடம் சுபான்ஷு ஷுக்லா தமது விண்வெளி பயண அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

❖❖❖❖❖❖

இணையவழி சூதாட்டம்

இணையதள விளையாட்டுகள் ஒழுங்குமுறை மசோதா நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.

மின்னணு விளையாட்டுகளையும், இணையதளத்தின் சமூக விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் அதே வேளையில் பணம் சார்ந்த ஆபத்தான ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகள், விளம்பரங்கள் அதுசார்ந்த பண பரிவர்த்தனைகளை தடைசெய்ய இம்மசோதா வழிகோலுகிறது.

இணையதள விளையாட்டுகளுக்கான ஒருங்கிணைந்த கொள்கைகளை உருவாக்குவதற்கான ஆணையத்தை நியமனம் செய்யவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிதி மேலாண்மையையும் நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதை இலக்காக கொண்டுள்ள இந்த மசோதாவில் இளையோர்கள், தனிநபர்கள் உள்ளிட்டோர் முறையற்ற விளையாட்டுகளில் ஈடுபடுவதை தடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஆன்லைன் விளையாட்டுகள் தொடர்பான அரசின் சட்டத்தை மீறுவோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ஒருகோடி ரூபாய் வரை அபராதத்திற்கும் இம்மசோதா வழிகோலுகிறது.

இந்த மசோதா மாணாக்கரை ஆன்லைன் சூதாட்டங்களிலிருந்து பாதுகாப்பதாக திருச்சி மாவட்டம் கருத்த கோடங்கி பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திருமதி. எழிலரசி தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கே.என்.நேரு

திருச்சியின் மையப்பகுதியில் செயல்படும் காந்தி மார்க்கெட் அதே இடத்தில் தொடர்ந்து இயங்கும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

பூவாலூரில் புதிய பேரூராட்சி அலுவலக கட்டிடத்தை இன்று திறந்துவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்த காய்கறி சந்தையை மாற்றப்போவதாக வெளியாகும் தகவல்கள் தவறாகும் என கூறினார்.

❖❖❖❖❖❖

உதகை

உதகை தாவரவியல் பூங்கா அருகே குடியிருப்பு பகுதிகளில் பொதுமக்களை அச்சுறுத்தி வரும் சிறுத்தை மற்றும் கரடியை பிடிக்க நவீன தானியங்கி கேமராக்களை பொருத்தி வனத்துறையினர் கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

அய்யா வைகுண்டர்

கன்னியாகுமரி மாவட்டம் சாமித்தோப்பு அய்யா வைகுண்டர் தலைமை பதியில் ஆவணி திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதில் ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

முக்கிய நிகழ்ச்சியான கலிவேட்டை வரும் 29-ம் தேதியும், தேரோட்டம் அடுத்தமாதம் ஒன்றாம் தேதியும் நடைபெறும்.

❖❖❖❖❖❖

டென்னிஸ்

தாய்லாந்தில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் சித்தார்த் ராவத் முன்னேறியுள்ளார்

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர் இங்கிலாந்தின் மேக்ஸ் பாக்சினை 2 - 6, 6-1, 6-1 என்ற செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖